FOLLOW US ON
JJNEWSTAMIL

ஜெஜெ நியூஸ் தமிழ்

JJ News Tamil This app is available for all of your devices

சென்னை | மலர்: 03 | இதழ் - 331 | 02-10-2025 | தனிச்சுற்று | TMRNINO:2022019833 | பக்கம் – 4 | விலை: 4/-

# இந்தியாவை உருவாக்க காந்தியின் பாதையை பின்பற்றுவோம் பிரதமர் மோடி

டில்லியில் காந்தி நினைவிடத்தில் பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார். வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க காந்தியின் பாதையை பின்பற்றுவோம் என சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

மகாத்மா காந்தியின் 157வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, காந்தியின் உருவப்படங்கள் மற்றும் நினைவிடங்களில் தலைவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர்.அந்த வகையில், டில்லி ராஜ்கோட்டில் உள்ள காந்தி நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் பல்வேறு தலைவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.காசாஇஸ்ரேல் போர்நிறுத்த திட்டம் வரவேற்பு: பிரதமர் மோடியின் பதிவை பகிர்ந்த டிரம்ப் முன்னதாக காந்தி பிறந்த நாளையொட்டி சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கை:துணிச்சலும், எளிமையும் கொண்டு மாற்றத்திற்கான கருவியாக செயல்பட்டவர் காந்தி. மக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான அத்தியாவசிய வழிமுறையாக சேவை மற்றும் இரக்கத்தின் சக்தியை அவர் நம்பினார்.வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அவரது பாதையை நாம் தொடர்ந்து பின்பற்றுவோம். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## செந்தில் பாலாஜி பேச வேண்டிய அவசியம் என்ன?

**பாஜக தலைவர் அண்ணாமலை**

சென்னை: நீதிமன்றமும், விசாரணை ஆணையமும் விசாரணை நடத்திக் கொண்டிருக்கையில், செந்தில் பாலாஜி இத்தனை பதட்டப்படுவதுதான் பலத்த சந்தேகங்களை எழுப்புகிறத என முன்னாள் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “கரூர் தவெக பொதுக்கூட்டத்தில், கூட்ட நெரிசலில் சிக்கி, பொதுமக்கள் உயிரிழந்தது குறித்து, தேசிய ஜனநாயக கூட்டணியின் எம்பிக்கள் குழு, பாதிக்கப்பட்ட பொதுமக்களைச் சந்தித்து, இந்த துயர நிகழ்வு தொடர்பான விசாரணை, பதவியிலிருக்கும் உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் நடைபெற, பரிந்துரைத்துள்ளது.

இந்த நிலையில் இன்று ஊடகங்களைச் சந்தித்த கரூர் திமுக சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் சாராய அமைச்சருமான செந்தில் பாலாஜி, புதிய கதைகளைக் கூறியுள்ளார். தவெக சார்பில், சிபிஐ விசாரணை கோரிய வழக்கு, வரும் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வரவிருக்கிறது. கூட்டத்தில்,விஜய் மீது செருப்பு வீச்சு உள்ளிட்ட அசம்பாவிதங்களுக்கான ஆதாரங்கள் இருப்பதாக தவெகவினர் தெரிவித்துள்ளனர். விசாரணையின்போது தவெக வழக்கறிஞர்கள் சமர்ப்பிக்கும் ஆதாரங்களை ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும் நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியது.

மேலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் உண்மை அறியும் குழுவிடம் பெண்மணி ஒருவர், கூட்டத்தில் கத்திக்குத்து நடந்ததாகக் கூறியிருக்கிறார். இப்படி பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கையில், இவர் இப்போது ஊடகச் சந்திப்பு நடத்தி, அவை எல்லாம் வதந்தி என்று கூற வேண்டிய அவசியம் என்ன?

கூட்டம் நடந்த கரூர் வேலுசாமிபுரம், கூட்டம் நடைபெறத் தகுதியான இடமா என்பதை விசாரிக்க, திமுக அரசே ஒரு ஆணையம் அமைத்துள்ள நிலையில், அதைக் குறித்து செந்தில் பாலாஜி பேச வேண்டிய அவசியம் என்ன? கருத்துத் திணிப்பு ஏற்படுத்துவதன் நோக்கம் என்ன என்ற கேள்விகள் எழுகின்றன.

யார் எங்கே சென்றார்கள், செல்லவில்லை என்று கேட்கும் தகுதி முதலில் திமுகவிற்கு இருக்கிறதா? கள்ளக்குறிச்சியில், திமுக கள்ளச்சாராய வியாபாரிகளால் விற்கப்பட்ட கள்ளச்சாராயம், 66 உயிர்களைப் பலிகொண்ட போது அங்கு போகாத முதலமைச்சர், தென்மாவட்டங்கள் பெருமழையால் பாதிக்கப்பட்டபோது, அங்கு சென்று மக்களைச் சந்திக்காமல், இந்தி கூட்டணி உடன்பாடுகளுக்கு டெல்லி சென்ற முதலமைச்சர், தற்போது மட்டும் ஓடோடி வந்ததன் பின்னணியை மக்கள் அறிவார்கள்.

நீதிமன்றமும், விசாரணை ஆணையமும் விசாரணை நடத்திக் கொண்டிருக்கையில், முன்னாள் சாராய அமைச்சர் இத்தனை பதட்டப்படுவதுதான் பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது” என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

## பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு

சென்னை: கரூர் நெரிசல் உயிரிழப்பு சம்பவம் திமுக அரசின் நிர்வாகத் தோல்வியால் நிகழ்ந்த பேரிடர் என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு வைத்துள்ளார். இது தொடர்பாக மாநில அரசுக்கு அவர் 12 கேள்விகளை முன்வைத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை (செப்.27) கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரிக்கவும், உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்கவும் பாஜக எம்.பி.க்கள் ஹேமமாலினி, அனுராக் தாக்கூர், தேஜஸ்வி சூர்யா மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் என 8 பேர் கொண்ட குழுவை அமைத்தார் பாஜக தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா. அந்த குழு நேற்று கரூர் வந்து சம்பவ இடத்தையும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரையும் சந்தித்தது.

இந்நிலையில், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை குறிப்பிட்டு 12 கேள்விகளை எக்ஸ் சமூக வலைதள பதிவில் முன்வைத்துள்ளார். அதின் விவரம்:

“செவ்வாய்க்கிழமை (செப்.30) அன்று பாஜக தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட உண்மை கண்டறியும் குழுவுடன் கரூர் கூட்ட நெரிசலால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து உரையாடினோம். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் குரலும் மனதில் ஏற்படுத்திய தாக்கத்தை விவரிக்க இயலவில்லை. முழுமையாகக் கலந்துரையாடி, இந்தப் பிரச்சினையைத் தெளிவாகப் புரிந்துகொண்ட பிறகு, மனதில் எழுந்த கேள்விகளை முதல்வர் ஸ்டாலினிடம் முன்வைக்க விரும்புகிறேன்.

› முதல்வர் மற்றும் துணை முதல்வர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கு மட்டும் கரூர் பேருந்து நிலைய ரவுண்டானாவை ஒதுக்கிய நிலையில், மற்ற கட்சிகளுக்கு ஒதுக்காதது ஏன்?

› விஜய் மீது செருப்பு வீசப்பட்டதையும், அங்கு கூடியிருந்த தொண்டர்கள் மீது தடியடி நடத்தப்பட்டதையும் காணொளிகள் காட்டுகின்றன. கத்தியால் குத்தப்பட்டதாகவும் சிலர் கூறினர். இவற்றைத் தாண்டி கூட்ட நெரிசல் ஏற்படக் காரணம் என்ன?

› கள்ளக்குறிச்சியில் நிகழ்ந்த கள்ளச்சாராய மரணங்கள், வேங்கைவயல் விவகாரம், மெரினா விமான சாகச நிகழ்வில் கூட்ட நெரிசல் மரணங்கள், 25 லாக்அப் மரணங்கள் போன்றவற்றுக்கு எல்லாம் செல்லாத முதல்வர் ஸ்டாலின், கரூரில் மட்டும் சிறப்பு கவனம் செலுத்துவது ஏன்? சரியா?

› திமுகவினரின் உணர்ச்சிப்பூர்வ நாடகத்தால் சந்தேகமடைந்துள்ள கோடிக்கணக்கான மக்களில் நானும் ஒருவன். கூட்ட நெரிசலுக்குப் பிறகு, உண்மையை மறைக்க திமுக அரசு இவ்வளவு அசாதாரண அவசரத்துடன் செயல்பட்டது ஏன்?

› 25 பேர் மீது வழக்கு பதிந்து, பத்திரிகையாளர் பெலிக்ஸ் உட்பட நான்கு பேரைக் கைது செய்து, மக்கள் மத்தியில் எழும் அனைத்துக் கேள்விகளையும் சந்தேகங்களையும் ஏன் இவ்வளவு விரைவாகத் திமுக அரசு முடக்குகிறது?

› 10,000 பேர் தான் கூடுவர் என்று தவறாக கணித்ததாக விஜய் மீது குற்றம் சாட்டும் திமுக அரசின் காவல் துறை, கூட்டத்தைச் சரியாக மதிப்பிடாதது ஏன்?

› விஜய், தாமதமாக வருவதனால் சில அசம்பாவிதங்கள் நடக்க வாய்ப்புள்ளது என்று அரசு கருதினால் கூட்டத்தை ஏன் ரத்து செய்யவில்லை?

› கூட்டத்தைக் கட்டுப்படுத்த பணியமர்த்தப்பட்ட காவலர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு என்பது உறுதி. உண்மையிலேயே எத்தனை பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்? பெரும் அரசியல் பேரணி நடக்கும் வேளையில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கரூரில் இல்லாதது ஏன்?

› இவ்வளவு குறைபாடுகள் அரசுத் தரப்பில் உள்ளன என்பது நிரூபணமான பின்பும், ஏன் அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய எந்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? இதில் ஏதேனும் உண்மைகள் புதைந்திருந்தால் அவை அம்பலப்பட்டுவிடும் என்ற அச்சமா?

› அறிக்கை சமர்ப்பிக்கும் முன்பே, திமுகவின் சட்டம் ஒழுங்கு தோல்வியை மறைக்கும் விதமான கருத்துகளை விசாரணை ஆணையத் தலைவர் வெளியிடுவது ஏன்?

› விசாரணை நடைபெறும் நிலையில் அது குறித்து பொது அறிக்கைகளை வெளியிட வருவாய் செயலாளருக்கு அதிகாரம் அளித்தது யார்? இது விசாரணையின் நடுநிலைத்தன்மையை சமரசம் செய்யாதா? திறமைமிக்க அரசு அதிகாரிகளைத் திமுகவின் கைப்பாவைகளைப் போல பயன்படுத்துவது சரியா?

› அஜித்குமார் லாக்அப் கொலை வழக்கை சிபிஐக்கு மாற்றிய திமுக அரசு, கரூர் வழக்கை ஒப்படைக்கத் தயங்குவது ஏன்?

திமுக அரசின் நிர்வாகத் தோல்வியால் நிகழ்ந்த பேரிடரே இத்துயரம் என்பது சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாகத் தெரிகிறது. எனவே தான், ஒரு நபர் ஆணையத்தின் மீது எந்த நம்பிக்கையுமின்றி சிபிஐ விசாரணை வேண்டுமெனக் கோருகிறோம். கோரிக்கையைப் பரீசீலிப்பதோடு, தமிழக மக்கள் சார்பாக நான் முன்வைத்த கேள்விகளுக்கும் முதல்வர் ஸ்டாலின் பதில் கூறுவார் என நம்புகிறேன்” என நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

## ஜென்டில்மேன்

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது: சீன அதிபர் ஜி ஜின்பிங் உடன் எனக்கு நல்ல தொடர்பு இருந்தது. அவர் டிக்டாக் செயலி தொடர்பான ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தார். என்னால் சீனாவுடன் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க முடிந்தது. இது

## கரூர் நீதிமன்றத்தில் நடந்த விவரம் என்ன ?

கரூர்: “முதல்வர், மற்ற தலைவர்களைப் போல நினைத்து விட்டீர்களா? விஜய் ஒரு ஸ்டார். அவரைப் பார்க்க ஏராளமானோர் வருவார்கள். அதை கணிக்க தவறிவிட்டீர்களா?” என்று தவெக தரப்புக்கு கரூர் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி கேள்வி எழுப்பினார்.

கரூர் வேலுசாமிபுரத்தில் செப்.27 ல் நடைபெற்ற தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், மாநில இணைச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோர் மீது கரூர் நகர போலீஸார் 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இதில் தலைமறைவாக இருந்த மாவட்டச் செயலாளர் மதியழகன், அவருக்கு அடைக்கலம் கொடுத்த கட்சி நிர்வாகி பவுன்ராஜ் ஆகியோரை திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையில் தனிப் படை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். பின்னர் அவர்களை கரூர் குற்றவியல் நீதிமன்றத்தில், நீதிபதி பரத்குமார் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தினர்.

இருவரையும் 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து, இருவரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். முன்னதாக, கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1ல் நடைபெற்ற விவாதங்களின் விவரம்:

நீதிபதி பரத்குமார்: “விஜய் பரப்புரையை காண 10 ஆயிரம் பேர் மட்டுமே வருவார்கள் என கணித்ததே தவறு. நீங்கள் உங்கள் தலைவரை முதல்வர், மற்ற தலைவர்களைப்போல நினைத்து விட்டீர்களா? அவர் ஒரு ஸ்டார். அவரைப் பார்க்க ஏராளமானோர் வருவார்கள். அதை கணிக்க தவறிவிட்டீர்களா?”

கரூர் டிஎஸ்பி செல்வராஜ்: “பிற்பகல் 3 மணிக்கு விஜய் வந்திருந்தால் கூட்ட நெரிசல் ஏற்பட்டிருக்காது.”

நீதிபதி (தவெகவினரிடம்): “நிர்வாகிகள் யாரும் தகவலை உங்கள் தலைவருக்கு சொல்லவில்லையா? கூட்டம் அளவை கடந்து சென்றது என தெரிந்தும் நிர்வாகிகள் ஏன் பரப்புரையை நிறுத்தவில்லை?”

தவெக: “கூட்ட நெரிசலுக்கு பின்னால் அரசியல் சூழ்ச்சி உள்ளது. ஒரு நபர் ஆணைய அறிக்கை வரும் வரை யாரையும் கைது செய்யக் கூடாது என உத்தரவிட வேண்டும். விஜய் பிரச்சாரக் கூட்டத்துக்கு வந்தது தானாக வந்த கூட்டம். யாரையும் அழைத்து வரவில்லை.”

நீதிபதி: “அதிக கூட்டம் வரும் என விஜய்க்கு சொல்லப்பட்டதா?. அவரவர் உயிரை காப்பாற்ற அவரவர் ஓடுகின்றனர். தவறு யார் மீது உள்ளது சொல்லுங்கள்.”

டிஎஸ்பி செல்வராஜ்: “பிரச்சார வாகனம் குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்தவுடன் போதும் என்றேன். ஆனால், ஆதவ் அர்ஜுனாதான் இன்னும் முன்னே செல்வோம் என்றார். முனியப்பன் கோயில் பகுதியில் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வாகனத்தை நிறுத்தி தாமதம் செய்தார். அப்போது விஜய் கேரவன் உள்ளே சென்று விட்டார். அங்கேயே விஜயை பார்த்திருந்தால் கூட்டம் கலைந்திருக்கும். விஜயின் வாகனம் உள்ளே சென்றபோதுதான் நெரிசல் ஏற்பட்டது.”

நீதிபதி: “விஜய்யை பார்க்க குழந்தைகள் கண்டிப்பாக வருவார்கள். அதற்கு தகுந்த இடத்தை கேட்டிருக்க வேண்டும். நீங்கள் கேட்ட 3 இடமுமே கூட்டத்துக்கு போதுமானதல்ல. இதே இடத்தில் பிரச்சாரம் செய்த எதிர்க்கட்சி தலைவரை பார்க்க வந்தவர்கள் அவர்களது கட்சியினர். ஆனால், விஜயை பார்க்க அனைவரும் வருவார்கள். காலாண்டு விடுமுறை, வார விடுமுறை உள்ள நிலையில் ஏன் இவ்வளவு கூட்டம் வரும் என்று எதிர்பார்க்கவில்லை” என பல்வேறு கேள்விகளை எழுப்பினார்.

அப்போது, போலீஸார் தங்களை ஒருமையில் பேசுவதாக நீதிபதியிடம் தவெகவினர் முறையிட்டனர். அதற்கு நீதிபதி, “அவர்களை அடிக்கவோ, ஒருமையில் பேசவோ கூடாது” என போலீஸாருக்கு அறிவுறுத்தியதுடன், இருவரையும் 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார். இதையடுத்து, இருவரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

---

41 உயிர்களை துள்ளத் துடிக்க பறித்த ஒரு தேசிய துயரம், ஆதாயம் தேடும் சில அரசியல் கட்சிகளால் அதன் பாதையிலிருந்து மெல்ல விலகி, முழுக்க முழுக்க அரசியலாக்கப்பட்டு வருவது மிகுந்த வேதனையளிக்கிறது. கரூர் சம்பவத்திற்கு தார்மிக பொறுப்பேற்று களத்தில் நின்று கஷ்டத்தைப் போக்க வேண்டிய தவெக, சதி என பழியை ஆளும் கட்சி மீது போட்டுவிட்டு தப்பிக்கப் பார்க்கிறது. இதன் மூலம், தங்களுக்கு இதில் எந்த சம்பந்தமும் இல்லை எல்லாம் திமுக தான் என்பது போல் அரசியல் அனுதாபம் தேடவே பார்க்கிறது தவெக.

அதேசமயம், தங்களை கடுமையாக விமர்சித்து வரும் விஜய்க்கு தக்க பதிலடி கொடுக்க காத்துக் கொண்டிருந்த திமுக, இந்தச் சம்பவத்தில் யாரும் அரசியல் அனுதாபம் தேடிவிடக் கூடாது என்பதற்காக சில உடனடி அதிரடி நடவடிக்கைகளை எடுத்தது. கரூருக்கு மறுநாள் காலையில் வருவார் என்று சொல்லப்பட்ட முதல்வர் நள்ளிரவே கரூருக்குப் புறப்பட்டு, ஆகவேண்டிய காரியங்களை முடுக்கிவிட்டார். அதையெல்லாம் சொல்ல மனமில்லாதவர்கள், இப்படி அதீத அக்கறை எடுத்துக் கொண்டதும் அரசியல் தான் என விமர்சிக்கவே செய்தார்கள்.

அதேசமயம், இந்த விவகாரத்தில் தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து கைது நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வரும் போலீஸார், கதாநாயகன் விஜய்யை கண்டுகொள்ளாமல் விட்டதும் அரசியல் தான் என்ற விமர்சனங்களும் வருகின்றன. விஜய் மீது கைவைத்தால் அது எதிர்மறை அரசியலாக்கப்பட்டு ஆளும் கட்சிக்கு எதிரான மன நிலையை மக்கள் மனதில் விதைத்துவிடும் என்பதே இதற்குள் இருக்கும் அரசியல் கணக்கு என்கிறார்கள்.

திமுகவுக்கு எதிரான விமர்சனங்கள் இப்படி என்றால் அதிமுக பாஜக கூட்டணியும் இதில் அரசியல் லாபம் பார்க்கவே ஆர்வப்படுகிறது. கள்ளக்குறிச்சி விஷச் சாராய சாவுகளுக்கு டெல்லியிலிருந்து குழுவை அனுப்பாத பாஜக, கரூருக்கு அனுப்புகிறது. பழனிசாமியும் அண்ணாமலையும் விஜய் மீது தவறே இல்லை என்ற தொனியிலேயே பேசுகிறார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளை உரிய முறையில் செய்யவில்லை என்பதே இவர்களின் கூட்டுத் தாக்குதலாக இருக்கிறது.

கரூர் சம்பவத்தில் சதி நடந்திருப்பதாகச் சொல்லி சிபிஐ விசாரணை கோருகிறது தவெக. இந்தச் சூழலில், இந்த இக்கட்டில் இருந்து எப்படி வெளியே வருவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் விஜய்க்கு ஆறுதலாக பேசுவது போல் பேசி அவரை தங்கள் பக்கம் ஈர்க்கலாமா என்ற நப்பாசை பாஜக கூட்டணிக்கு இருக்கிறது. அதனால் தான் சிபிஐ விசாரணை தேவை என்று அதிமுகவும் பாஜகவும் தவெக உடன் ஒத்து ஊதவும் ஆரம்பித்திருக்கின்றன. அதேசமயம், சிபிஐ விசாரணை நடந்தால் அதன் முடிவுகளை வைத்தும் விஜய்க்கு அரசியல் ரீதியாக நெருக்கடி கொடுக்கத்

## ஜி.டி. ஹாலிடேஸுக்கு சிறந்த இந்திய பயண பிராண்ட் விருது

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, டெல்லி தி லீலா ஹோட்டலில் நடைபெற்ற இந்தியா ட்ராவல் அவார்ட்ஸ் விழாவில் ஜி.டி. ஹாலிடேஸ் "சிறந்த பயண பிராண்ட் 2025" என்ற விருதினைப் பெற்றது. இதன்மூலம், தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக இந்த விருதைப் பெறும் சாதனையை நிறுவனம் நிகழ்த்தியுள்ளது.

இவ்விழாவில் மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் தலைமை விருந்தினராகவும், சுற்றுலா அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் மற்றும் இயக்குநர் ஜெனரல் சுமன் பில்லா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தின் இயக்குநர் அஸ்வனி லோஹானி, இந்தியாவிற்கான பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் லிண்டி கேமரூன் ஆகியோரும் பங்கேற்றனர்.

வாடிக்கையாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் சேவைத் திறன், புதுமையான பயணத் தீர்வுகள், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் தொடர்ந்து வெளிப்படுத்திய சிறந்த செயல்திறன் ஆகியவற்றுக்காக ஜி.டி. ஹாலிடேஸ் இந்த விருதுக்குத் தேர்வானது. மறக்கமுடியாத பயண அனுபவங்களை உருவாக்குதல், பொறுப்பான சுற்றுலாவை ஊக்குவித்தல் மற்றும் உலகளாவிய கூட்டாண்மைகளை வலுப்படுத்துதல் ஆகிய அம்சங்கள் விழாவில் விருது வழங்குவதற்கான முக்கிய காரணங்களாகக் குறிப்பிடப்பட்டன.

சமீபகாலமாக, வெளிநாட்டு சுற்றுலாவை விரும்பும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தென்கிழக்கு ஆசியா, ஐரோப்பா, மத்திய கிழக்கு, வட அமெரிக்கா




போன்ற பிரபல இடங்களுக்கு பயணிக்கும் இந்தியர்களின் முதன்மைத் தேர்வாக ஜி.டி. ஹாலிடேஸ் உருவெடுத்துள்ளது. விசா உதவி, விமான டிக்கெட், தங்குமிடம், உள்ளூர் போக்குவரத்து மற்றும் தனிப்பயன் பயணத் திட்டங்கள் என தேவையான அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்கும் திறன் தான் இதற்குக் காரணமாகும்.

“இந்த விருது எங்கள் வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், ஊடகக் கூட்டாளர்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்குச் சொந்தமானது. அவர்களின் நம்பிக்கையே எங்களை தொடர்ந்து புதுமை செய்து மேம்பட்ட சேவைகளை வழங்க தூண்டுகிறது,” என ஜி.டி. ஹாலிடேஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் டிஜிட்டல் தீர்வுகளை விரிவுபடுத்துதல், புதிய சேவைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் இந்திய சுற்றுலாத் துறையில் முன்னணி நிலையை வலுப்படுத்துவதே நிறுவனத்தின் நோக்கமாகும்.

ஜி.டி. ஹாலிடேஸ் பற்றி ஜி.டி. ஹாலிடேஸ் இந்தியாவின் முன்னணி பயண நிறுவனங்களில் ஒன்றாகும். உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுப்பயண தொகுப்புகள், கார்ப்பரேட் சேவைகள், தனிப்பயன் விடுமுறை அனுபவங்கள் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கி வருகிறது. வலுவான தொழில்முறை குழுவினரின் பங்களிப்புடன், ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பயணிகளுக்கு சேவையளித்து வருகிறது.

---

வாஷிங்டன்: டெஸ்லாவின் பங்கு மீட்சி, ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் எக்ஸ் ஏஐ நிறுவனத்தின் மதிப்பு உயர்ந்ததன் மூலம், எலான் மஸ்க் சொத்து மதிப்பு 500 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது. இதனால் அரை டிரில்லியன் செல்வத்தை சம்பாதித்த முதல் நபர் என்ற அந்தஸ்தை எலான் மஸ்க் பிடித்தார்.

அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் போர்ப்ஸ் நாளிதழ், உலக கோடீஸ்வரர்கள் பட்டியலை வெளியிட்டு உள்ளது. இந்த பட்டியலில், ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா நிறுவனத்தின் சிஇஓ.,வும், எக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளருமான எலான் மஸ்க் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். அவரது சொத்து மதிப்பு 499.5 பில்லியன் டாலர். இதனால் எலான் மஸ்க் வரலாற்று சாதனை படைத்து இருக்கிறார்.

இகாமர்ஸ் சந்தை; ஏற்றுமதி வர்த்தகத்தின் இன்னொரு கதவு

அரை டிரில்லியன் செல்வத்தை நெருங்கிய வரலாற்றில் முதல் நபர் என்ற அந்தஸ்தை எலான் மஸ்க் பிடித்தார். இதற்கு, டெஸ்லாவின் பங்கு மீட்சி, ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் எக்ஸ் ஏஐ நிறுவனத்தின் மதிப்பு உயர்ந்தது காரணம். டெஸ்லா நிறுவன பங்கு தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறது. மின்சார கார் தயாரிக்கும் நிறுவனத்தின் பங்குகள் இந்த ஆண்டு 14 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்துள்ளன.

கடந்த புதன் கிழமை மட்டும் கிட்டத்தட்ட 4 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனால் மஸ்க் 7 பில்லியன் அமெரிக்க டாலர்களை சம்பாதிக்க வழி வகுத்தது. அதேநேரத்தில் பட்டியலில் 2வது இடத்தில் இருக்கும் ஆரக்கிள் நிறுவனத்தின் இணை நிறுவனர் லாரி எலிசன்

## கோவை சித்தாபுதூர் ஐயப்பன் கோவிலில் நடைபெற்ற வித்யாரம்பம்

விஜயதசமியை முன்னிட்டு கோவை சித்தாபுதூர் ஐயப்பன் கோவிலில் நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான பெற்றோர்கள் அவர்களது குழந்தையை அழைத்து வந்து நாக்கிலும் அரிசியிலும் பெயரை எழுதி கொண்டனர்.

விஜயதசமி நாளில் பெரும்பாலான பெற்றோர்கள் அவர்களது குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பர். மேலும் இந்நாளில் ஏடு துவங்குதல் எனப்படும் வித்யாரம்பம் நிகழ்ச்சியில் குழந்தைகளுக்கு நாக்கிலும் அரிசியிலும் எழுத வைத்தால் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள் என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளது. அதன்படி அனைத்து ஐயப்பன் கோவில்களிலும் இன்றைய தினம் வித்யாரம்பம் நிகழ்ச்சியானது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன்படி கோவையில் சித்தாபுதூர்



ஐயப்பன் கோவிலிலும் வித்யாரம்பம் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பெற்றோர்கள் குழந்தைகளை அழைத்து வந்து சிறப்பு வழிபாடு மேற்கொண்டனர்.

தொடர்ந்து நம்பூதிரிகள் குழந்தைகளின் நாக்கில் குழந்தைகளின் பெயர்களை எழுதினர். பின்னர் குழந்தைகளின் விரலைப் பிடித்து அரிசியில் தாய்மொழியின் முதல் எழுத்து, குழந்தைகளின் பெயர், பிள்ளையார் சுழி, அம்மா,அப்பா என்று எழுத வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக 100க்கும் மேற்பட்டோர் முன்பதிவு செய்து உள்ளதாக கோவில் நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கூட்டம் வருகை புரிவதால் அனைவரும் வரிசையில் நிற்க வைக்கப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் பொழுது சில குழந்தைகள் அமைதியாக எழுத்துக்களை எழுதினர். சில குழந்தைகள் பயந்து அழுது அடம் பிடித்தனர்.

---

**குழந்தை திருமணத்தில் ஈடுபடுவோ மீது கடும் நடவடிக்கை: அரியலூ ஆட்சியா பேச்சு**

அரியலூ மாவட்டத்தில், குழந்தை திருணத்தில் ஈடுபடுவோமீது கடும் நடவடிக்கை எடுப்படும் என்று ஆட்சியரும், குழந்தைகள் பாதுகாப்புக் குழுத்தலைவருமான பொ.ரத்தினசாமி தெரிவித்தா.

அரியலூ மாவட்ட ஆட்சியா அலுவலகக் கூட்டரங்கில், வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில், காலாண்டில் நிறைவேற்றப்பட்ட தீமானத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்த ஆட்சியா ரெத்தினசாமி பின்னா அலுவலாகளிடையே கூறியதாவது

கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக் கூட்டம் நடத்த வேண்டும். குழந்தை திருமணம் தடுத்தல் தொடாபாக அதிக விழிப்புணாவு வழங்கப்பட வேண்டும். சுய உதவிக்குழு மூலமாகவும் விழிப்புணாவு வழங்கப்பட்டு குழந்தை திருமணம் நடைபெறாத வண்ணம் கண்காணிக்க வேண்டும்.

பள்ளிகளில் குழந்தை திருமணம் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நடைபெறாதவாறு விழிப்புணாவு ஏற்படுத்த வேண்டும். பள்ளிகளில் போதைப் பொருள்கள் தீமைகள் குறித்த விழிப்புணாவு ஏற்படுத்த வேண்டும். பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அரசின் வாயிலாக இழப்பீட்டு தொகை விரைவாக பெற்று வழங்கிட வேண்டும். கரோனா பெருந்தொற்றால் பெற்றோ இருவரையும் இழந்த குழந்தைக்கு தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து இழப்பீடு தொகை

## ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்

தென் திருப்பதியான கலியுக வரதராஜ பெருமாள் கோவிலில் புரட்டாசி இரண்டாம் சனிக்கிழமை ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்

பள்ளி காலாண்டு விடுமுறை என்பதால் பக்தர்கள் கூட்டம்

அரியலூர் அருகே கல்லங்குறிச்சியில் கலியுக வரதராஜ பெருமாள் கோவில் உள்ளது

இக்கோவில் தென்னகத்தின் திருப்பதி என பக்தர்களால் அழைக்கப்பட்டுவருகின்றது.



இக்கோவில் அரியலூர் மட்டும் இல்லாமல் தஞ்சாவூர், சேலம், ஆத்தூர், மயிலாடுதுறை, பெரம்பலூர், கும்பகோணம்,கள்ளக்குறிச்சி, திட்டக்குடி, விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் பிரசித்திபெற்ற கோவில் ஆகும்.

இந்நிலையில் இன்று புரட்டாசியில் இரண்டாம் சனிக்கிழமை என்பதால் ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்

மேலும் கோவிந்தா கோவிந்தா என்ற பக்த கோஷங்களும் அவர்கள் பெருமாளை வழிபட்டனர்

பெருமாளுக்கு அலங்காரங்கள் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது

பக்தர்கள் வசதிக்காக அரியலூரில் இருந்து கோவிலுக்கு ஏராளமான அரசு பேருந்துகள் இயக்கப்பட்டன.

---

**வயது மூப்பின் காரணமாக உயிரிழந்த வெல்டிங் ஒர்க்ஸ் உரிமையாளரின் உடலை உறவினர்கள் அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தானமாக வழங்கினர்**

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தை சேர்ந்தவர் நடராஜன்(80) இவர் ஜெயங்கொண்டம் விருத்தாச்சலம் ரோட்டில் காயத்ரி வெல்டிங் ஒர்க்ஸ் கடை நடத்தி வந்த இவர் கடந்த சில மாதமாக உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திடீரென உயிரிழந்தார். இவருக்கு மூன்று மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். இவர் உயிரோடு இருக்கும் பொழுது தனது குடும்பத்தினரிடம் தான் இறந்த பிறகு தனது உடலை மருத்துவக் கல்லூரிக்கு தானமாக வழங்க வேண்டும் என தெரிவித்திருந்தார். அதன்படி உயிரிழந்த நடராஜனின் உடலுக்கு உறவினர்கள் செய்ய வேண்டிய இறுதி சடங்கை செய்த நிலையில் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தியதையடுத்து அவரது குடும்பத்தினர் நடராஜனின் உடலை அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு முழு மனதோடு தானம் செய்தனர். அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து வந்த மருத்துவர்கள் நடராஜனின் உடலை மருத்துவக் கல்லூரிக்கு வாங்கி சென்றனர். நடராஜனின் உடல் பதப்படுத்தப்பட்டு மருத்துவ மாணவர்களின் கல்விக்கு பயன்படுத்தப்படும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தான் இறந்த பிறகும் தனது உடல் நூற்றுக்கணக்கான மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும் என நினைத்த நடராஜனின் எண்ணம் மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

## ஏற்காடு குண்டூர் மலைப்பாதையில் நிலச்சரிவு ஏற்பட்ட இடத்தை சீரமைக்கும் பணிகள் தீவிரம்

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கடந்த சில வாரங்களுக்கு முன் பெய்த மழையால் குண்டூர் கிராமத்திற்கு செல்லும் மலைப்பாதையில் ஒரு இடத்தில் சிறிய அளவிலான நிலச்சரிவு ஏற்பட்டது. அந்த இடத்தில் நெடுஞ்சாலை துறையினர் எம்சாண்ட் மூட்டைகள் அடுக்கி தற்காலிகமாக சாலையை சீரமைத்தனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக ஏற்காட்டில் இரவு நேரத்தில் பலத்த



மழையால் நிலச்சரிவு ஏற்பட்டு தற்காலிகமாக எம்சாண்ட் மூட்டைகளை அடுக்கி சீரமைக்கப்பட்டு இருந்த இடத்தில் மழை நீர் அதிக அளவில் ஓடி அந்த மூட்டைகள் சரிந்து மீண்டும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் அந்த சாலையில் வாகனங்கள் செல்வதில் சிறிது சிரமம் ஏற்பட்டது. அதை தொடர்ந்து ஏற்காடு நெடுஞ்சாலை துறையினர் நிலச்சரிவு ஏற்பட்ட இடத்தை தற்காலிகமாக சீரமைக்கும் பணியை நேற்று தொடங்கி தீவிரமாக செய்து வருகின்றனர்.

## திமுக அரசின் மோசமான செயல்பாடுகளால் ஆசிரியர்கள் கடும் மன உளைச்சலில் உள்ளனர்: இபிஎஸ்

வேடசந்தூர்: திமுக அரசின் மோசமான செயல்பாடுகளால் ஆசிரியர்கள் கடும் மன உளைச்சலில் உள்ளனர் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார். திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் பொதுமக்களிடையே நேற்று மாலை அவர் பேசியதாவது: அதிமுக ஆட்சியில் ஒரே ஆண்டில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை கொண்டு வந்தோம். திமுக ஆட்சியில் இதுவரை ஒரு மருத்துவக் கல்லூரியை யாவது கொண்டு வந்தார்களா? தமிழகத்தை திறமையற்ற முதல்வர் ஆள்வதால் மக்களுக்குத் தேவையான திட்டங்கள் கிடைக்கவில்லை.

சட்டம் ஒழுங்கும் சீர்குலைந்து விட்டது. போதைப் பொருட்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவில்லை. பெண்கள், சிறுமிகளுக்கு பாதுகாப்பு இல்லை. கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் வழக்குகள் அதிகரித்துவிட்டன. இப்படிப்பட்ட ஆட்சி தொடர வேண்டுமா? திண்டுக்கல் துணை மேயர் மகனுக்கு போதைப் பொருள் விற்பனையில் தொடர்பு உள்ளதாக கர்நாடக போலீஸார் சம்மன் வழங்கி உள்ளனர்.

அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைந்துவிட்டது. போதுமான ஆசிரியர்கள் இல்லை. ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளதால் ஆசிரியர்கள் கடும் மன உளைச்சலில் உள்ளனர். திமுக ஆட்சியில் 992 புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டதாகவும், அதில் 75 சதவீதம் நிறைவேற்றப்பட்டதாகவும் முதல்வர் கூறுகிறார்.

இதன்படி பார்த்தால் 25 லட்சம் பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். எனவே, முதல்வர் சொல்வது அத்தனையும் பொய். வேடசந்தூர் நூற்பாலைகள் நிறைந்த பகுதி மின் கட்டண உயர்வு காரணமாக பல தொழிற்சாலைகள் மூடும்நிலையில் உள்ளன. அதிமுக ஆட்சியில் குடிமராமத்து திட்டத்தைக் கொண்டுவந்து, ஏரி, குளங்களைத் தூர்வாரினோம். இதுபோன்று திமுக ஏதாவது சாதனை நிகழ்த்தியிருக்கிறதா? 10 ரூபாய் என்றாலே செந்தில் பாலாஜி நினைவுதான் வரும். பாட்டிலுக்கு ரூ.10 வீதம் ஆண்டுக்கு ரூ.5,400 கோடி ஊழல் செய்கின்றனர். இவ்வாறு அவர் பேசினார்.

## தமிழகத்தின் கல்வி எழுச்சியை இந்தியாவே திரும்பி பார்க்கிறது

சென்னை: ‘தமிழகம் கல்வியில் பெற்றுள்ள எழுச்சியை, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்கள் திரும்பி பார்க்கின்றன’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். தமிழக அரசு சார்பில் ‘கல்வியில் சிறந்த தமிழகம்’ கல்வி எழுச்சி கொண்டாட்ட விழா மற்றும் நடப்பு கல்வியாண்டுக்கான புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் தொடக்க விழா சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் உள்ளிட்ட அரசின் 7 திட்டங்களில் பயன்பெற்று, முக்கிய இடங்களில் பணியாற்றும் பயனாளிகள், தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து, நடப்பு கல்வியாண்டில் 2 லட்சத்து 65,318 பேர் பயன்பெறும் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து முதல்வர் பேசியதாவது: இந்த நிகழ்ச்சி எங்களை பாராட்டிக் கொள்ள அல்ல. உங்களை கொண்டாடுவதை பார்த்து, அடுத்து வரும் மணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். தெலங்கானாவில் உள்ள நல்ல திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். இதுதான் ஆரோக்கியமான அரசியல். கல்வியால் அடுத்த தலைமுறை முன்னேறும். ஆயிரம் ஆண்டுகளாக சாதி எனும் சதி ஆட்கொண்டதால் நம் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது. சென்னை மாகாண பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை நீதிக் கட்சி ஆரம்பித்தது. காமராஜர் தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை அறிமுகம் செய்தார். அது படிப்படியாக வளர்ந்து, காலை உணவு திட்டமாக உருவாகியுள்ளது.

ஒரு வேளை உணவு தருவதால், மாதம் ரூ.1,000 தருவதால் என்ன பெரிய மாற்றம் வந்துவிடும் என்று சிலர் நினைக்கலாம். காலை உணவு வந்த பின்னர் மாணவர்கள் வருகை அதிகரித்துள்ளது. புதுமைப் பெண் திட்டத்தால் பிளஸ் 2 படித்தவர்களில் 75 சதவீதம் பேர் உயர்கல்வியில் சேர்கிறார்கள். தமிழகம் கல்வியில் பெற்றுள்ள எழுச்சியை, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்கள் திரும்பிப் பார்க்கின்றன. நம் திட்டங்களை அவர்களின் மாநிலங்களில் செயல்படுத்த திட்டம் வகுத்து வருகிறார்கள். இந்த எழுச்சிக்கு தடை ஏற்படுத்த மத்தியில் நினைக்கிறார்கள். நம் வளர்ச்சிக்கு தடை ஏற்படுத்த நினைப்பவர்களுக்கு நாம் பயத்தை ஏற்படுத்த வேண்டும். கல்வியில் உயர்ந்த தமிழகத்தை உருவாக்குவோம். இவ்வாறு முதல்வர் பேசினார்.

தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி பேசியதாவது: முன்னாள் முதல்வர் மறைந்த கருணாநிதியின் தொலைநேக்கு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலினும், துணை முதல்வர் உதயநிதியும் நிறைவேற்றி வருகின்றனர். தமிழகம் கல்வியிலும் விளையாட்டிலும் தலைசிறந்த மாநிலமாக விளங்குகிறது. இங்குள்ள காலை உணவு, தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட திட்டங்கள் பாராட்டுக்குரியவை. காலை உணவு திட்டத்தை தெலங்கானா மாநிலத்தில் அடுத்தகல்வியாண்டில் நடைமுறைப்படுத்த உள்ளோம்.

தமிழகத்தைப் பின்பற்றி தெலங்கானா அரசும், சமூக நீதி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் ஓபிசி, எஸ்சி., எஸ்டி பிரிவினருக்கு 69 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட இருக்கிறது. தெலங்கானாவில் கல்விக்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். அங்கு ஆண்டுக்கு 1.10 லட்சம் பேர் பொறியியல் பட்டம் பெறுகின்றனர். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் ‘யங் இந்தியா’ திட்டத்தை செயல்படுத்தி உள்ளேம். விரைவில் விளையாட்டுக்கு அகாடெமி தொடங்க இருக்கிறேம். இதில் தமிழக மாணவர்களுக்கு முக்கிய இடம் வழங்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்



பின்னத்தூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது வட்டார வளர்ச்சி அலுவலர் சதீஷ்குமார் தலைமை தாங்கினார் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் அமுதா முன்னிலை வகித்தார் பரங்கிப்பேட்டை ஒன்றிய திமுக செயலாளர்கள் கலையரசன் டாக்டர் மனோகர் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி முகாமை துவக்கி வைத்தனர் முகாமில் 16 துறைகளை சார்ந்த அதிகாரிகள் பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டனர் நிகழ்ச்சியில் துணை பி.டி.ஒ. சுப்புலட்சுமி அவைத்தலைவர் நல்லதம்பி ஒன்றிய துணை செயலாளர்கள் சுதா இளவரசு முன்னாள் சேர்மன் கருணாநிதி அமைப்புசாரா ஓட்டுனர் அணி சுப்பு வெங்கடேசன் இளைஞரணி துணை அமைப்பாளர் சேர மன்னன் தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி நிர்வாகிகள் காதர் மஸ்தான் சுதாகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

## OPSகுடும்பத்தினருடன் ஆயுத பூஜையை கொண்டாடினார்

முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் பெரியகுளத்தில் உள்ள தனது வீட்டில் குடும்பத்தினருடன் ஆயுத பூஜையை கொண்டாடினார்

தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரைப் பகுதியில் உள்ள முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இல்லத்தில் இன்று ஆயுத பூஜை மற்றும் சரஸ்வதி பூஜை தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வம் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி சரஸ்வதி, விநாயகர் சுவாமிகளுக்கு நடைபெற்ற சிறப்பு பூஜையில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்

முன்னதாக ஓ.பன்னீர்செல்வத்தின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார், பிரச்சார வாகனம், விவசாய டிராக்டர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வாகனங்கள் உள்ளிட்டவைக்கு ஆயுத பூஜை தினத்தை முன்னிட்டு வாழை இலை தோரணங்கள் கட்டப்பட்டு கொண்டாடப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வத்தின் குடும்ப உறுப்பினர்கள், அவரின் பாதுகாவலர்கள், மற்றும் பணியாளர்கள் என ஏராளமான கலந்து கொண்டனர்



திருவள்ளூர்: மீஞ்சூர் அருகே எண்ணூர் அனல்மின் நிலைய கட்டுமான பணியில் சாரம் சரிந்து விழுந்து, வடமாநில தொழிலாளர்கள் 9 பேர் உயிரிழந்த சம்பவம், பொதுமக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திருவள்ளூர் மாவட்டம், வாயலூரில் இரு 660 மெகா வாட் திறனுடைய எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல மிக உய்ய அனல் மின் திட்ட கட்டுமானப் பணிகள் சமீப காலமாக நடைபெற்று வருகிறது.

பாரதமிகு நிறுவனம் சார்பில் நடைபெற்று வரும் இந்த கட்டுமான பணியில், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வடமாநில தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கட்டுமான பணியில் தற்போது, சுமார் 70 சதவீத பணிகள் முடிவடைந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல மிக உய்ய அனல் மின் நிலைய கட்டுமான பணியில், அனல்மின் நிலைய முகப்பு பகுதி அமைக்கும் பணியில் நேற்று மாலை சுமார் 30க்கும் மேற்பட்ட வடமாநில தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். அப்போது, திடீரென இரும்பு கம்பிகளால் ஆன முகப்பு பகுதியில் உள்ள சாரம் சரிந்து விழுந்தது.

இதில், படுகாயமடைந்த பலரில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றவர்கள் சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு 4 தொழிலாளர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். மேலும் சிலர் ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்துக்குறித்து தகவலறிந்த மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், ஆவடி காவல் ஆணையரக அதிகாரிகள், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையினர் சம்பவ இடம் விரைந்து, மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். அது மட்டுமல்லாமல், விபத்து குறித்து தீவிர ஆய்வு செய்தனர். இது குறித்து தகவலறிந்த தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு விரைந்து, தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

நிவாரணம் அறிவிப்பு: இதனிடையே விபத்தில் உயிரிழந்த தெழிலாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 10 லட்சம் நிவாரணம் அறிவித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். மேலும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக அமைச்சர் சிவசங்கரை அனுப்பியுள்ளதாகவும் முதல்வர் தெரிவித்துள்ளார். இதேபோல் பிரதமர் மோடியும் தெழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சமும் காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் நிவாரணம் அறிவித்துள்ளார்.

## மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி

கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு பல்சமய நல்லுறவு இயக்கம் மற்றும் கிரீன் கார்டன் நண்பர்கள் குழு சார்பாக மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி

கோவை உக்கடம் பகுதியில் பல்சமய நல்லுறவு இயக்கம் மற்றும் கிரீன் கார்டன் நண்பர்கள் குழுவினர் ஒருங்கிணைத்த இதில்,கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் படங்களுக்கு முன்பாக மெழுகுவர்த்தி ஏந்தி இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இதில் பல்சமய நல்லுறவு இயக்க தலைவர் முகம்மது ரஃபி உட்பட பலர் கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்..

இதில்,கோட்டைமேடு பகுதி செயலாளர் பதுருதீன் பல்சமய நல்லுறவு இயக்கம் நிர்வாகி அபுதாஹீர் இஸ்மாயில். டிஸ்கோ காஜா கிரீன் கார்டன் நண்பர்கள் குழு நிர்வாகிகள் அக்கீம் இப்ராஹிம் அசாருதீன் மைதீன் செட் முபாரக் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் என . பொதுமக்கள் கலந்து கொண்டனர்...

இதில் பேசிய பல்சமய நல்லுறவு இயக்கத்தின் தலைவர் முகம்மது ரபி,கரூர் சம்பவம் குறித்து பொதுமக்களுக்கு அறிவுரை கூறும் வகையில் பொறுப்பாக தமிழக



முதல்வர் பேசியுள்ளதாக தெரிவித்தார்..

அதே நேரத்தில் கரூர் பிரச்சார சம்பவம் நடந்து மூன்று நாட்களுக்கு பிறகு வீடியோ ஒன்றை வெளியிட்டு பேசியுள்ள த.வெ.க.தலைவர் விஜய் பக்குவம் இல்லாமல் பொறுப்பற்ற முறையில் பேசியுள்ளதாக சுட்டி காட்டிய அவர்,அரசியலில் நடிகர் விஜய் ஜீரோ என்பதை இதன் மூலம் நிரூபித்துள்ளதாக தெரிவித்தார்..

## முதல்முறையாக விமானத்தில் பறந்த அரசு பள்ளி மாணவியர்



கரூர் சோமூர் அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களை முன்னால் அமைச்சர் செந்தில் பாலாஜி கோவையில் இருந்து வழியனுப்பி வைத்தார்

நீண்ட நாள் கனவு நிறைவேறியதாக மாணவர்கள் உற்சாகம்

கரூர் சோமூர் பகுதியில் உள்ள அரசு பள்ளியில் பயிலும் 30 மாணவர்கள் மற்றும் மூன்று ஆசிரியர்களை சென்னைக்கு விமானம் மூலம் சுற்றுலாவாக கரூரை சேர்ந்த தன்னார்வ அமைப்பினர் அழைத்து சென்று கவனம் ஈர்த்துள்ளனர்..

கரூர் ரவுண்ட் டேபிள்,மெட்ராஸ் ஸ்டெர்லிங் ரவுண்ட் டேபிள் மற்றும் லேடீஸ் சர்க்கிள் ஆகியோர் இணைந்து இந்த சுற்றுலாவை ஒருங்கிணைத்து உள்ளனர்..

கரூரிலிருந்து வேன் மூலமாக அழைத்து வரப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களுடன் கோவை விமான நிலையத்தில் இருந்து சென்னைக்கு விமானத்தில் பயணித்தனர்.

முன்னதாக கோவை விமான நிலையத்தில் மாணவர்களை வழியனுப்பும் நிகழ்ச்சியில் முன்னால் அமைச்சர் செந்தில் பாலாஜி கலந்து கொண்டு மாணவர்களை வழியனுப்பி வைத்தார்..

இது குறித்து கல்வி சுற்றுலா அழைத்து செல்லும் தன்னார்வலர்கள் வெங்கட் ராகவன்,அஜய் மோகன்,நந்திதா ஆகியோர் கூறுகையில், விமானத்தில் பயணித்த மாணவ, மாணவிகள் முதல் முறையாக பயணிப்பதால் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவித்தனர்..

சென்னைக்கு சென்றதும், அவர்களுக்கு தேவையான காலை உணவு, மதிய உணவு என அனைத்தையும் வழங்கி,சென்னையின் முக்கிய இடங்களுக்கு அழைத்து செல்வதாக தெரிவித்தனர்..

முதல் முறையாக விமானத்தில் பயணம் செய்த மாணவர்கள், விமானத்தில் இருந்தபடி மேல் இருந்து கீழே உள்ளே பகுதிகளை பார்வையிட்டு ரசித்தனர்.

இந்த பயணமானது மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் இடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கு பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் பாராட்டுகள் குவிந்து வருகின்றன..

4 வாரங்களில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திப்பேன் என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். இது குறித்து நிருபர்களிடம், ''சீன அதிபர் ஒரு ஜென்டில்மேன். எங்களுக்கு அவர்களுடன் ஒரு நல்ல உறவு உள்ளது'' என டிரம்ப் தெரிவித்தார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவ: சீனா பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று விரும்புவதால், நமது நாட்டின் சோயாபீன்ஸ்யை வாங்காததால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். அதே நேரத்தில், வரி விதிப்பு மூலம் நாம் நிறைய பணத்தை சம்பாதித்துள்ளோம். அந்த பணத்தின் ஒரு சிறிய பகுதிகளை எடுத்து நமது விவசாயிகளுக்கு உதவ போகிறோம்.

திமுக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி,

மேற்கு மண்டல பொறுப்பாளர் அண்ணன் வி.செந்தில் பாலாஜி அவர்களின்



ஆலோசனைப்படி,கோவை மாநகர் மாவட்டம் புதிய பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட துரை. செந்தமிழ் செல்வன் அவர்களைகோவை மாநகர் மாவட்டம் வர்த்தகர் அணி சார்பாக,வர்த்தகர் அணி அமைப்பாளர், கோவை மாநகராட்சி பொது சுகாதார குழு தலைவர், பெ.மாரிசெல்வன் விநீ தலைமையில் கழகப் பணி சிறக்க வாழ்த்துக்கள் தெரிவித்தபோது.இந்நிகழ்வில் வர்த்தகர் அணி தலைவர் சுப்பிரமணி, துணை தலைவர் விஷிவி தங்கவேலு, துணை அமைப்பாளர்கள், அருண்பிரகாஷ், K.C.ரமேஷ்குமார், தர்மா, நடராஜன், R.K.பாபு, சுரேஷ் ,காட்டூர் குமார், மகேந்திரன், சதீஷ்குமார், நடராஜன், சந்திரசேகர், ஜெயபால் , கெம்பட்டி பகுதி பொறுப்பாளர் என்.ஜெ. முருகேசன் பெரிய கடை வீதி பகுதி துணைச் செயலாளர் பழக்கடை முத்து முருகன், 80வார்டு செயலாளர் நா.தங்கவேலன், வானவன் மணி கள்ளிமடை மோகன்ராஜ்,

## ஏரியூரில் உலக மருந்தாளுர்கள் தினம் விழிப்புணர்வு கருத்தரங்கம்.



தமிழ்நாடு அனைத்துப் பதிவு பெற்ற மருந்தாளுநர்கள் நலச் சங்கம் மற்றும் ஏரியூர் தமிழ்ச் சங்கம் ஆகியவை இணைந்து உலக மருந்தாளுர்கள் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு கருத்தரங்கம் ஏரியூர் மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்விற்கு கல்லூரி தாளாளர் பஸ்பநாதன் தலைமை வகித்தார்.

கல்லூரி முதல்வர் சடையன் , சமூக ஆர்வலர் நரசிம்மகுமார் , கமலேசன் , இயற்கை ஆர்வலர் துரை முத்துக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் ம.இராஜகணபதி வரவேற்று பேசினார்.

ஏரியூர் தமிழ்ச் சங்கம் நிறுவுநர் மற்றும் தலைவர் நாகராஜ் , சங்க செயலாளர் ம.அருள்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சின்னப் பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பழனி , ஏரியூர் அரசு மேல்நிலைப் பள்ளி முதுநிலை ஆசிரியர் தகடூர் வெ.சரவணன் ஆகியோர் கருத்தரங்கை தொடங்கி வைத்து விழா பேருரை ஆற்றினர்.

தமிழ்நாடு அனைத்துப் பதிவு பெற்ற மருந்தாளுநர்கள் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவர் கார்த்திக், மாநில செயலாளர் கிருஷ்ணகுமார், மாநில பொருளாளர் ராஜகணபதி , பொதுக்குழு உறுப்பினர்,கோவை மண்டல பொறுப்பாளர் பிரசாந் கண்ணன், சேலம் மண்டல பொறுப்பாளர் சி சம்பத் ஆகியோர் மருந்துகள் குறித்தும், மருந்துகள் பயன்படுத்தும் முறை குறித்தும் கருத்துரை வழங்கினார்கள்.

நிறைவாக மாநில துணைச் செயலாளர் த.சந்தோஷ்குமார் நன்றி கூறினார். நிகழ்வில் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## ஈரோடு வருகை தந்த பாஜக மாநில நெசவாளர் அணிஅமைப்பாளர்அண்ணாதுரை



மற்றும் மாநில நெசவாளர் அணி இணை அமைப்பாளர்செல்வராஜ் ஆகியோர்களை

தமிழ்நாடு நெசவாளர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக நேரில் சந்தித்து மரியாதை செலுத்திஈரோடு தெற்கு மாவட்ட நெசவாளர் பிரிவு சார்பில் நடைபெற்றமரியாதை நிமித்த கூட்டத்தில் விசைத்தறி நலனுக்கான மத்திய மாநில அரசு தொடர்பான கோரிக்கைகளை எடுத்துரைக்கப்பட்டது.

## அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச சிருடை வழங்கும் விழா

அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச சிருடை வழங்கும் விழா.




ஈரோடு மாவட்டம் பவானி பிரபாத் J.K.நாராயணன் சேரிட்டபுள் டிரஸ்ட் சார்பாக 21ஆம் ஆண்டாக அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச சீருடை காலை உணவு வழங்கும் விழா பவானி ஸ்ரீ ஐயப்ப சுவாமி சேவா நலச் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு பிரபாத் ஜே.கே.நாராயணன் சேரிட்டபுள் டிரஸ்ட் தலைவர் பிரபாத் சி.மகேந்திரன் தலைமை வகித்தார். ஜே.கே.எம். ஜெயப்பிரகாஷ் ஜே.கே.கே.எம்.கல்வி நிறுவனங்கள், ப.சீ.நாகராசன் பவானி திமுக நகர செயலாளர், எம்.சீனிவாசன் அதிமுக நகர செயலாளர், இன்ஜினியர் தண்டாயுதபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் கோயில் உதவி ஆணையர் அருள்குமார், செல்லியாண்டி அம்மன் கோயில் செயல் அலுவலர் கிருஷ்ணன், பவானி காவல் ஆய்வாளர் முருகய்யன், குமாரபாளையம் காவல் ஆய்வாளர் தவமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பவானி சட்ட மன்ற உறுப்பினர் கருப்பண்ணன்,

பவானி நகர மன்ற தலைவர் சிந்தூரி, ஆகியோர் இலவச சீருடை வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவில் ஜம்பை, ஓரிச்சேரிபுதூர், பவானி, குமாரபாளையம் பகுதியை சுற்றியுள்ள அரசு பள்ளி மாணவமாணவிகள் சுமார் 610 பேருக்கு காலை சிற்றுண்டியுடன் இலவச சீருடை வழங்கப்பட்டது.

பவானி நகர் மன்ற தலைவர் சிந்தூரி பேசும்போது மாணவமாணவிகளுக்கு கல்வியுடன் ஒழுக்கத்தையும் ஆசிரியர்கள் கற்ப்பிக்க வேண்டும் என்றும், பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளை தங்களின் கண்காணிப்பு மற்றும் அரவணைப்பில் வளர்க்க வேண்டும் என்று பல்வேறு நிகழ்வுகளை சுட்டிக்காட்டி பேசியது அனைவரையும் கவர்ந்தது.

விழாவில் பவானி குமாரபாளையம் பகுதியை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், தலைமை ஆசிரியர்கள், இருபால் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் பெற்றோர்கள், மாணவமாணவிகள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை டிரஸ்ட் உறுப்பினர்கள் மாதேஸ்வரன், ராமராஜ் மற்றும் ஜோதிமுருகன், சீனிவாசன், தனசேகரன், வெங்கடேசன், செல்வம் ஆகியோர் செய்திருந்தனர்.

முடிவில் எஸ்.நாராயண் அனைவருக்கும் நன்றி கூறினார்.



ஈரோடு மாவட்ட ஜாக்டோ ஜியோ பெருந்திரள் முறையீடு இயக்கம் நடைபெற்றது. ஈரோடுமாவட்ட ஆட்சியர் கந்தசாமியிடம் மனு அளிக்கப்பட்டது.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டாட்சியராக இளஞ்செழியன் பொறுப்பேற்றுக்கொண்டார்

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு மாநகரத்திற்கு உட்பட்ட கோட்டை பகுதியில் உள்ள 36, 37வது வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு காமராசர் நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், மாநகராட்சியின் துணை மேயர் செல்வராஜ், பகுதி கழக செயலாளர் ராமச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் பழனியப்பா, செந்தில், ஜெயந்தி ,தீபலட்சுமி, வட்டக் கழக செயலாளர் ஹரி, பூபாலன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .அதனைத் தொடர்ந்து மேட்டுக்கடை தங்கம் மஹாலில் நடைபெற்ற முகாமில் அமைச்சர் கலந்து கொண்டு முகாமை பார்வையிட்டார்.



## திண்டுக்கல்லில் ளிழிணி TOUCH (ஒன் டச்) அறக்கட்டளை திறப்பு விழா.

திண்டுக்கல்லில் ONE TOUCH (ஒன் டச்) (one touch life's change ஒரு தொடுதலில் வாழ்க்கை மாற்றம்) அறக்கட்டளை திறப்பு விழா நிகழ்ச்சி திண்டுக்கல் கிழக்கு ஆரோக்கிய மாதா தெருவில் உள்ள சுக்கான்மேடு சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ளிழிணி ஜிளிஹிசிபி (ஒன் டச்) நிர்வாக இயக்குனர் Pr.எஸ்.டேவிட் பிரைனார்ட் ®.கெத்சியாள் ஆனந்தி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியின் முன்னதாக கலை நிகழ்ச்சிகளின் நடனம் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக மெர்சி பவுண்டேஷன் மற்றும் ஆதவன் உலக செம்மொழி தமிழ் சங்கத்தின் நிர்வாக இயக்குனர் டாக்டர் மெர்சி செந்தில்குமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி ONE TOUCH (ஒன் டச்) அறக்கட்டளையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தாய்க்கூடு பவுண்டேஷன் நிறுவனர் டாக்டர் எஸ். குணவதி, தலைமை பணியாளர் (AIHBA) எம்.எஸ்.பி. கிரானைட்டுகள் நிர்வாகக் கூட்டாளர் லயன்.ஏ.கமலேஸ்வரி , ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியின் முடிவில் (ஒன் டச்) ONE TOUCH நிர்வாக இயக்குனர் Pr.எஸ்.டேவிட் பிரைனார்ட் நிகழ்ச்சயை சிறப்பாக ஒருங்கிணைத்து நன்றி கூறினார்.









கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயிலில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்ற ரோட்டரி கேலக்ஸி சார்பாக எதிர்காலத்தின் எதிர்காலம் . எனும் கவிதை நூலை வெளியிட்டு விழாவாக கொண்டாடினார் புத்தகத்தை கவிதை வடிவில் எழுதியவர் பட்டதாரி ஆசிரியர் கவிஞர் ஜெயக்குமார் அவர்களால் இயற்றப்பட்டு புத்தக வடிவில் வெளியிட்டனர் மேலும் ஆசிரியர்களுக்கான விருது விழா வும் நடைபெற்றன இந்நிகழ்வில் சிறந்த ஆசிரியர்களை தேர்வு செய்து அவர்களுக்கு விருது வழங்கினார்கள் விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக, ஸிமீஸீ, பூங்குன்றன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார் மேலும் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டவர்களின் முன்னாள் ரோட்டரி கவர்னர் கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட்டார் இவருடன் புலவர் தலைமை ஆசிரியர் ஓய்வு மற்றும் பலர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் முன்னதாக அனைவரையும்வரவேற்று




உரையாற்றியனர் முன்னாள் ரோட்டரி கவர்னர் ரூபி பாஸ்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் மதிய அறுசுவை உணவும் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் திரளான ஆசிரியர் மாணவ மாணவர்களும் சமூக ஆர்வலர்களும் பத்திரிகை நண்பர்களும் ஓய்வு பெற்ற ஆசிரியர் மற்றும் தமிழாசிரியர்கள் ஏனைய தமிழ் அறிஞர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்

---

பெரியகுளத்தில் ஆயுத பூஜையை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகள்





தங்கள் புத்தகத்திற்கு சந்தனம் குங்குமம் பொட்டு வைத்து பிரார்த்தனை செய்தனர்

தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரையில் உள்ள நாமத்வார் பிரார்த்தனை மையத்தில் ஆயுத பூஜையை முன்னிட்டு கிருஷ்ணன் ராதைக்கு சிறப்பு அபிஷேக பூஜைகள் நடைபெற்றது அதனைத் தொடர்ந்து வண்ணமலர்கள் மற்றும் பட்டு உடுத்தி கிருஷ்ணன் ராதை பக்தர்களுக்கு காட்சியளித்தார்

அதன் பின்பு பிரார்த்தனை மையம் சார்பாகபெரியகுளம் மற்றும் அதை சுற்று வட்டார பகுதியில் இருந்து பெற்றோர்களுடன் மாணவ மாணவிகள் தங்கள் படிக்கும் புத்தகங்களுக்கு சந்தனம் குங்குமம் மலர்கள் வைத்து கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்

மேலும் மாணவ மாணவிகளுக்கு கல்வி நலன் வேண்டி சிறப்பு பிரார்த்தனைகளும் நடைபெற்றது

அதனைத் தொடர்ந்து கிருஷ்ணன் ராதை சுவாமிக்கு சிறப்பு தீபாரணிகள் நடைபெற்றது இதில் ஏராளமான பள்ளி மாணவிகள் பெற்றோர்கள் பொதுமக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர் அதனைத் தொடர்ந்து பிரார்த்தனை மையம் சார்பாக மாணவ மாணவிகளுக்கு நோட்டு பென்சில் பேனா உள்ளிட்ட கல்வி உபகரங்கள் சிறப்பு பூஜைகள் செய்து வழங்கப்பட்டனர்

---

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே கோதைமங்கலத்தில் நவராத்திரி திருவிழாவை முன்னிட்டு, கோதை ஈஸ்வரர் கோவிலில், அம்பு போடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து செய்திருந்தார்.





பழனி ஆதீனம் சிவானந்த புலிப்பாணி பாத்திர சுவாமிகள் அம்பு வில் எய்தார். பழனி நகர காவல் துணை கண்காணிப்பாளர் தனஞ் ஜெயன், காவல் ஆய்வாளர் மணிமாறன், நகராட்சி ஆணையர் டிட்டோ, சண்முகானந்தம் என்ற ஜம்பு சாமிகள், கவுன்சிலர் விமலபாண்டியன் ஆகியோர் உடன் இருந்தனர்

---

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயிலில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்ற ரோட்டரி கேலக்ஸி சார்பாக எதிர்காலத்தின் எதிர்காலம் .

எனும் கவிதை நூலை வெளியிட்டு விழாவாக கொண்டாடினார்

புத்தகத்தை கவிதை வடிவில் எழுதியவர் பட்டதாரி ஆசிரியர் கவிஞர் ஜெயக்குமார் அவர்களால் இயற்றப்பட்டு புத்தக வடிவில் வெளியிட்டனர் மேலும் ஆசிரியர்களுக்கான விருது விழா வும் நடைபெற்றன இந்நிகழ்வில் சிறந்த ஆசிரியர்களை தேர்வு செய்து அவர்களுக்கு விருது வழங்கினார்கள் விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக, ஸிமீஸீ, பூங்குன்றன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார் மேலும் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டவர்களின் முன்னாள் ரோட்டரி கவர்னர் கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட்டார் இவருடன் புலவர் தலைமை ஆசிரியர் ஓய்வு மற்றும் பலர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் முன்னதாக அனைவரையும் வரவேற்று உரையாற்றியவர் முன்னாள் ரோட்டரி அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார் மதிய அறுசுவை உணவும் நடைபெற்றது இந்நிகழ்வில் திரளான ஆசிரியர் மாணவ மாணவர்களும் சமூக ஆர்வலர்களும் பத்திரிகை நண்பர்களும் ஓய்வு பெற்ற ஆசிரியர் மற்றும் தமிழாசிரியர்கள் ஏனைய தமிழ் அறிஞர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்

---

## தொண்டர் படை விஜய் அமைக்க வேண்டும்

விஜயகாந்த் போல் மக்களை பாதுகாக்க தொண்டர் படை விஜய் அமைக்க வேண்டும் என்று சிவ



பக்த சேனா ஆன்மீக பகுத்தறிவு அறக்கட்டளை நிறுவனர் வேண்டுகோள்

திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்தவர் சிவக்குமார் இவர் சிவ பக்த சேனா பகுத்தறிவு அறக்கட்டளையை நிறுவி சிவன் கோயில்களை ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில் இவர் இன்று தேனி மாவட்டம் லோயர் கேம்பில் உள்ள முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கண்ணன் ஜான் பென்னிகுக் அவர்களின் திருஉருவ சிலைக்கு வந்து மாலை அணிவித்து விட்டு பத்திரிகையாளர்களை சந்தித்து பேசினார் அப்போது அவர் கூறுகையில் சமீபத்தில் கரூரில் நடைபெற்ற துயர சம்பவம் அனைவரையும் பெரும் பாதிப்பிற்கு உள்ளாக்கி உள்ளது. இந்த சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்ற விவாதம் நடைபெற்று வருகிறது இந்த சம்பவத்திற்கு இரண்டு தளபதிகளும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். விஜய் தரப்பில் இடம் கூறுகளாக கொடுத்தது தான் காரணம் என கூறுகின்றனர் அதை அரசு தரப்பில் அவர் தாமதமாக வந்தது தான் காரணம் என கூறுகின்றனர் விஜய் புதிதாக அரசியலுக்கு வருகிறார் ஒரு படப்பிடிப்பின் போது தாமதமாக இதுவரை சென்றாரா என்று கேள்வி எழுப்பினால் கண்டிப்பாக இருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் ஷூட்டிங்கில் தாமதம் என்றால் அதன் இழப்பீடு என்ன என்பது அவர்களுக்கு நிச்சயம் தெரியும். காமராஜரை மேற்கோள்காட்டி பேசுகின்றனர் அவ்வாறு பேசுகிறேன் காமராஜர் என்பவர் நேரம் தவறாமல் நடக்கக் கூடியவர் அவ்வாறு இருக்கையில் அதனை இவர்கள் பாலோ செய்திருக்க வேண்டும் அதேபோன்று அரசு தரப்பை பொறுத்த அளவில் எனக்கு ஓட்டு போட்டவர்கள் மட்டுமல்ல எனக்கு ஓட்டு ஓடாதவர்களுக்கும் நான்தான் முதலமைச்சர் என ஸ்டாலின் கூறுகிறார். அதன் அடிப்படையில் பார்க்கும்போது விஜய் ரசிகர்களுக்கும் விஜயை தேடி வருபவர்களுக்கும் அவர் முதல்வராக இல்லையா என்று கேள்வி எழுகிறது. இவர்களது பாதுகாப்பு பணிகளை முறைப்படி செய்திருந்தால் இந்த விபத்து தடுக்கப்பட்டிருக்கும்.

அதேபோன்று இரு தரப்பிலிருந்து நிவாரணங்கள் அறிவிக்கின்றனர் அரசு தரப்பில் 10 லட்சம் விஜய் தரப்பில் 20 லட்ச ரூபாய் அறிவித்துள்ளார். மாற்று அரசியலை கொடுக்கக் கூடிய சூழ்நிலைக்கு வருவதாக கூறும் விஜய் அரசு அறிவித்த தொகை விட அதிக நிவாரணத் தொகை அறிவிக்கிறார் அதாவது நானும் மற்ற அரசியல்வாதி போல் தான் செயல்படுகிறேன் என்று சொல்கிறாரா அல்லது மாற்று சக்தியாக இருப்பேன் என்று கூறுகிறாரா என்பது தெரியவில்லை.

ஈரோடு சார்ந்த மோகன் என்பவரது கண் பார்வையற்ற தாய் தனது ஒரே மகனை இழந்து தவிக்கிறார் அவரை தத்தெடுத்து எடுத்துக் கொள்ளுமா தத்தெடுத்துக் கொள்வது என்பதும் ஒரு நல்ல அரசியல் தான் எத்தனையோ பேர் வெளிநாட்டில் இருந்து வந்து மக்களை தத்தெடுக்கின்றனர் அதேபோன்று ஆதரவில்லாமல் இருப்பவர்களை தத்தெடுத்துக் கொண்டால் புதிய அரசியலாக இருக்கும். இரு தரப்பினரும் அவர்களது ஈகோ கலை தவிர்க்க வேண்டும் என்று கூறினார். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் காயம் பட்டவர்கள் பூரண குணமடைய எல்லாம் வல்ல சிவனை வேண்டிக் கொள்வதாக தெரிவித்தார் மேலும் விஜயகாந்த் இது போன்ற அவர்கள் தொண்டர்கள் பொதுமக்கள் என பல்ரும் கூட்டம் கூடுகையில் அவர்களை கட்டுப்படுத்தும் விதமாக தொண்டர் படையை வைத்திருந்தார் விஜயகாந்தை அண்ணன் எனக்கு ஒரு விஜய் ஏன் அவ்வாறு ஒரு தொண்டர் உருவாக்கக் கூடாது என்ற கேள்வி எழுப்பினார். எனவே இனிவரும் காலங்களில் நேரம் தவறாமல் என்பதை விஜய் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்

---

அமைதியை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் ஆதரிப்போம்; டிரம்பின் காசா போர் அமைதி திட்டத்திற்கு ஐநா வரவேற்பு

நான் ஒருபோதும் நமது விவசாயிகளுக்கு பாதிப்பு உருவாக சம்மதிக்க மாட்டேன். அதிபராக இருந்த போது தூக்கத்தில் இருந்த ஜோ பைடன் சீனா உடன் எந்த ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தவில்லை. நான்

---

## பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி




குமாரபாளையத்தில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில் கலெக்டர் பங்கேற்று பேரணியை துவக்கி வைத்தார்.

குமாரபாளையத்தில் மாவட்ட மாசுக்கட்டுப்பாட்டு துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் தனியார் கல்லூரி சார்பில் நெகிழி இல்லா நாமக்கல் மாவட்டம் எனும் தலைப்பில் விழிப்புணர்வு பேரணி நடந்தது.நகராட்சி தலைவர் விஜய்கண்ணன் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கலெக்டர் துர்கா மூர்த்தி பங்கேற்று, பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். முக்கிய சாலைகளின் வழியாக சென்று, பேரணி ஆனங்கூர் பிரிவு சாலையில் நிறைவு பெற்றது. காவிரி கரையோரப் பகுதியில் மாவட்ட கலெக்டர் மரக்கன்றுகள் நட்டு வைத்தார். மாஸ் கிளீன் பணியை துவக்கி வைத்தார். தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி பயில அரசு சார்பில் உதவி வழங்கப்படும் என்று கலெக்டர் துர்கா கூறினார். இதில் நகராட்சி ஆணையாளர் ரமேஷ், மாவட்ட மாசுக்கட்டுப்பாட்டு துறை அலுவலர் செல்வகணபதி, சமூக ஆர்வலர் கவுன்சிலர்கள், மகளிர் குழுவினர் உள்பட பலர் பங்கேற்றனர்.

---

ஜம்பை,ஆப்பக்கூடல் பேரூராட்சிகளில் தூய்மை பணியாளர்களின் வாயில் கூட்டம் நடைபெற்றது..

வருகின்ற 2.10.2025 வியாழக்கிழமை ஈரோட்டில் நடைபெறும் கோரிக்கை மாநாட்டில்

ஒப்பந்த தொழிலாளர் முறையை கைவிடு பணி நிரந்தரம் செய், நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் வழங்கு, கொரானா காலத்தில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்த ரூ.15,000 உடனே வழங்கு,

ஆகிய கோரிக்கைகளுக்காக நடைபெறும் மாநாட்டில் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பராயன் பங்கேற்க உள்ளதால் மாநாட்டில் அனைவரும் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டு நோக்கங்களை கண்ணன் விளக்கிப் பேசினார்.



## நூல்வெளியீட்டு விழா !..

குமாரபாளையம் எழுத்தாளர் திரு.கேசவ மூர்த்தி ராஜகோபாலன் எழுதிய தோட்டாக்கள் துளைத்த நெஞ்சங்கள் நூல் 28 ம் தேதி குமாரபாளையம் கிளை நூலகத்தில் வெளியிடப்பட்டது.

உலக வரலாற்றில் ஒரு மொழிக்காக பல லட்சம் பேர் போராடியதும் பலர் தங்களைத் தாங்களே தீயிட்டுக் கொளுத்திக்கொண்டும் விஷமருந்தி மாய்த்துக் கொண்டது மட்டும் அல்லாமல், அரசின் அடக்குமுறை காரணமாக பல நூறு பேர் உயிரிழந்ததும் 1965 ல் தமிழ் மொழி காக்க தமிழ் நாட்டில் நடந்த இந்திப் போராட்டத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்படி நடந்த இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டப் பின்னணியில் எழுதப்பட்ட உலகின் முதல் நாவல் இது தான் என்பது குறிப்பிடத்தக்கது.

கிளை நூலக வாசகர் வட்ட தலைவர் விடியல் பிரகாஷ் தலைமை தாங்க,

ரெயின்போ காமராஜ் வரவேற்புரை நிகழ்த்த,

நூல் திறனாய்வாளர் சங்ககிரி ஆசிரியர் பெரியசாமி நூல் அறிமுக உரை நிகழ்த்த,

தமிழ் நாடு தமிழறிஞர் விருதாளர் கவிஞர். மல்லை இராமநாதன் அவர்கள் நூலை வெளியிட, மொழிப் போர் தியாகி திரு.ப.சு.வடிவேல் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

மொழிப் போர் தியாகிகள் நினைவுத் தூண் அமைப்புக் குழு

செயலாளர் பகலவன், துணைச் செயலாளர் ரவி, கவிஞர் குமரேசன், கிளை நூலகர் திருமதி.மாரியாயி

வாழ்த்தி உரை யாற்றினார்கள்.

நூலாசிரியர் கேசவ மூர்த்தி ராஜகோபாலன் ஏற்புரை ஆற்றினார்.

வாசகர் வட்டத்தைச் சேர்ந்த பஞ் சாலை சண்முகம் நன்றியுரை வழங்கினார்.

நிகழ்ச்சியை நூலக வாசகர் வட்ட மனநல மருத்துவர் திரு.ஜெ.சண்முகசுந்தரம் தொகுத்து வழங்கினார்.

குமாரபாளையம் திமுக வடக்கு நகர செயலாளர் ஞானசேகரன்,நாகு அன்பழகன், ஜனதா குப்புசாமி, ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் கே.அசோகன் மற்றும் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.

